பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 09 வெள்ளிக்கிழமை (25-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 232

[illegible] யாழ்ப்பாணம் [illegible]

# வடக்குக்கான சரக்கு கப்பல்களுக்கு செஞ்சிலுவை பாதுகாப்பு வழங்காது

## கரையிலிருந்து 40 மைல் தூரத்தில் கப்பலைச் செலுத்த மாற்று ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 25

வடக்குக்கான சரக்குக் கப்பல் சேவையை நடத்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழித்துணை வழங்கமாட்டாது. இதனை அடுத்து, இதற்கு மாற்று ஏற்பாடாக சரக்குக் கப்பல்கள் கரையில் இருந்து 40 மைல் தூரத்தில் பயணம் செய்ய அனுமதிப்பது என்று முடிவாகி உள்ளது.

வடக்குக்கான கப்பல் சேவையை நடத்த செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வழித்துணை வழங்க மாட்டாது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

வடக்குக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லும் கப்பல்களுக்கு வழித்துணை வழங்குமாறு எம்மிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று கொழும்பில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் எமது அமைப்பும் பங்கு கொண்டது. அகதிகளுக்கான ஐ.நா. தூதரக பிரதிநிதிகளும் அதில் பங்கு கொண்டனர்.

பாதுகாப்பு அமைச்சு, வடமாகாண மீள்குடியமர்வு அதிகார சபை, அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் ஆகி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் கப்பல் சேவை குறித்து

## ஐ.நா. தூதரகம் புலிகளுடன் தொடர்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

மன்னாரில் தங்கியுள்ள அகதிகளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வர கப்பல் சேவை ஒன்றை நடத்துவதற்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளது.

கொழும்பில் கடந்த வாரம் நடந்த உயர்மட்ட மாநாடு ஒன்றில் மன்னார் — காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவையை நடத்துமாறு அகதிகளுக்கான ஐ.நா.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிசூட்டு காயத்துடன் சடலம்

யாழ்ப்பாணம் ஜூலை 25

நுணாவில் வீதியில் நேற்றுக்காணப்பட்டதாக சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் சாவகச்சேரிப் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தின் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்கான காயம் காணப்பட்டது; கண்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப கப்பல்கள் சுற்றிவர கட்டணமும் அதிகரிக்குமோ...!

## 'ஓஷன் சக்ஸஸ்' வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 25

கொழும்பிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வடக்கு நோக்கிப் புறப்பட்ட 'ஓஷன் சக்ஸஸ்' என்னும் கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்தது.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் வந்துள்ள இக்கப்பலில் ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுஸ்தாபனத்துக்கும் பொருள்கள் வந்துள்ளன.

சிமெந்து ஓடு தயாரிப்பதற்கான இயந்திரங்களும் இக்கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் — பருத்தித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஷெல் வீச்சை அடுத்து ஹெலிகள் பதில் தாக்குதல்!

### நெடுங்கேணி பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 25

நேற்று முன்தினம் நெடுங்கேணியில் உள்ள படையினரின் நிலைகள் மீது விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினர் என்றும்—

அதற்கு பதிலடியாக படையினர் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது ஹெலித் தாக்குதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புலிகள் நடத்திய ஷெல் தாக்குதலில் 4 படையினர் இறந்ததாகவும் 11 படையினர் காயம் அடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

ஹெலித் தாக்குதலில் புலிகள் தரப்பில் 20 பேர் இறந்ததாகவும் அவர் கூறினார்

(இ-3-4-10)

## காங்கேசனுக்கு பொருள்களை எடுத்துவர இந்திய கப்பல்கள் மறுப்பு

### கொழும்பில் இறக்கி விட்டுச் சென்றன

குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு இந்திய அரசு வழங்கியுள்ள உதவிப்பொருள்களை நேரடியாக காங்கேசன்துறைக்கு எடுத்து வர இந்திய கப்பல் நிறுவனங்கள் மறுத்துள்ளன.

குடாநாட்டில் வலி-வடக்கு உட்பட ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள் குடியமர்வுப் பணிகளுக்கு இந்திய அரசு 80 ஆயிரம் பைக்கெட் சிமெந்து; கூரைத்தகடுகள் ஆகியவற்றை நன்கொடையாக வழங்க முன்வந்தது.

இந்த நன்கொடைப் பொருள்களை தமிழகத்தில் இருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்துவர ஏற்பாடாகியிருந்தது.

காங்கேசன்துறைக்கு இப்பொருள்களை எடுத்துக் வர இந்திய கப்பல் நிறுவனங்கள் மறுப்புத் தெரிவித்து, முதல் கட்டமாக ஆயிரத்து நூறு மெற்றிக் தொன் பொருள்களை கொழும்புத் துறைமுகத்தில் இறக்கி விட்டுத் திரும்பியுள்ளன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## எம். பிக்களின் எண்ணிக்கையை குறைக்கும்திட்டம்கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூலை 25

நாடாளுமன்றத்திலுள்ள 225 உறுப்பினர்களின் எண்ணிக்கையை 198 ஆகக் குறைக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல்வாதிகள் மற்றும் அமைப்புக்கள் இத்திட்டத்தை கடுமையாக எதிர்த்ததால் இத்திட்டம் கைவிடப்படுகிறது என நீதிஅரசமைப்பு, விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தேசியப் பட்டியலில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வது தொடர்பாக இன்னும் தீர்மானிக்கவில்லை எனத் தெரிவித்த அமைச்சர் தேசியப் பட்டியலில் 10 உறுப்பினர்கள் தெரிவாக வாய்ப்புண்டு எனக்கூறினார்.

(இ-10)

## புலிகளுக்கு எதிராகப் போரிட தப்பி ஓடியோருக்கு அழைப்பு

### பொதுமன்னிப்பு நாளை முடிவடைகிறது

கொழும்பு, ஜூலை 25

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெறுவதற்கு, மீண்டும் இராணுவத்தில் சேருமாறு இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களுக்கு இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று நடந்த சமயம் அதில் வைத்து அவர் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

தப்பியோடிய இராணுவத்தினர் மீண்டும் படையில் சேருவதற்கு நாளை நள்ளிரவு வரை வழங்கப்பட்டுள்ள பொது மன்னிப்பின் பேரில் [illegible] ரால் விடுக்கப்பட்டது.

(இ-3-10)

## மகரஹம கொள்ளை பின்னணியில் தப்பி ஓடிய லெப்டினன்ட்!

கொழும்பு, ஜூலை 25

பட்டப்பகலில் இரு பொலீஸாரைச் சுட்டுக்கொலை செய்து இரண்டரை லட்சம் ரூபாவை துணிகரமாக கொள்ளையடித்த கொள்ளைக் கூட்டத்தின் தலைவன், விமானப் படையில் இருந்து தப்பி ஓடிய லெப்டினன்ட் என்று தெரியவந்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி மஹரகம கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து வங்கிக்கு வைப்பிட வானில் எடுத்துச் செல்லப்பட்ட பணத்தை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வழி மறித்து காவலுக்குச் சென்ற பொலீஸாரை கொலை செய்து விட்டு பணத்தை கொள்ளையடித்தது தெரிந்ததே.

(இ-10-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை 12,000 குடும்பங்களுக்கே ரூ.5,000 மீளக்குடியமர்வு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 25 யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்வு நிவாரணமாக இதுவரை 12 ஆயிரம் குடும்பங்களுக்கே 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள 60 ஆயிரம் குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு நிவாரணம் வழங்க 30 கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் இதுவரை 6 கோடி ரூபாவே கிடைத்துள்ளது என்றும் —

இதன் மூலம் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே இதுவரை நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதே நேரம் — கொழும்பில் இருந்து 2 கோடி 50 லட்சம் ரூபா இக் கொடுப்பனவுக்காக நேற்று வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)


## வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் புதிய அதிபராக பதவியேற்றிருக்கும் எமது பழைய மாணவரான

**திரு. அ. சிறிக்குமாரன்**

அவர்களை

★ வாழ்த்தி வரவேற்கின்றோம் ★

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம். (சி/1191)


## மரண அறிவித்தல்கள்

### முத்தையா இரத்தினசிங்கம்
(இளைப்பாறிய அதிபர்)

கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்த முத்தையா இரத்தினசிங்கம் 20-07-1996 இல் கொழும்பில் காலமான திருமதி சிவயோகமலரின் அன்புக் கணவரும், கொழும்பு யோகேஸ்வரன், லண்டன் வாசிகளான நிர்மலயோகினி, வசந்தயோகினி, விக்னேஸ்வரன், சுரேஸ்வரன், விமலயோகினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி கனகசபையின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இவர் தனது 80 ஆவது வயதில் ஜூலை 17 ஆம் திகதி லண்டனில் உறக்கத்திலேயே காலமானார் என்பதை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

தகவல்:
சகோதரர்

சுவாமியார் வீதி,
யாழ்ப்பாணம். (48577)

### செல்லையா கந்தசாமித்துரை
(கட்டி அப்பா)

ரவி அன் ராஜ், மகளிர் கோட்டம் உரிமையாளரும் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும், இல. 34, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரைப் வசிப்பிடமாகவும் கொண்ட செ. கந்தசாமித்துரை 24-07-97 இல் சென்னை மருத்துவமனையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டாக்டர் செல்லையா, திருமதி செல்லமாணிக்கம் ஆகியோரின் கனிஷ்ட புதல்வனும் திருமதி இராஜசுந்தரேஸ்வரியின் அன்புக் கணவரும் ரதி, ரகு, உஷா, ராஜ், காலஞ் சென்ற ரவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், டாக்டர் கோபாலன், திருமதி காருணிரகு, திருமதி றெஜினா ராஜ், ஆகியோரின் மாமனாரும், ஹரிதரன், அச்சுதன், சிவராமன், ஆகியோரின் பேரனும் திருமதி பார்வதி பாலசுப்பிரமணியம் திருமதி முத்துமாணிக்கம் வேலும் மயிலும், காலஞ்சென்ற குமாரசாமியின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னை அண்ணா நகரில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. ரகு
(மகன்)

34, செட்டித் தெரு ஒழுங்கை,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (48578)

### வைரமுத்து முருகையா
(இளைப்பாறிய காப்புறுதிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)

தெல்லிப்பழை, பன்னாலையை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகக் கொண்டவருமான வை. முருகையா அவர்கள் 19 - 07 - 1997 அன்று மாரடைப்பால் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து — பாறுவதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், தன்னாலை ஏரம்பமூர்த்தி தம்பதிகளின் அன்பு மருமகனும், தெய்வநாயகி (மணி)யின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், திருமதி பொ. இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதாகரன் (இங்கிலாந்து), கிருஸ்ணபவானி, சத்தியதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21 - 07 - 1997 அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. துரைசிங்கம்
(மைத்துனர்)

திருமதி தெ. முருகையா,
135/26 தர்மாராமபுர,
பாமன் கடைச் சந்தி,
கொழும்பு — 06. (48583)

## திட்டங்கள் குறித்து ஆராயப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 25 பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியில் இருந்து யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் குறித்த இறுதி முடிவு எதிர்வரும் 5 ஆம் திகதி மேற்கொள்ளப்படவிருக்கிறது.

கொழும்பில் அன்று கூடும் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட்டு விரைவில் அத்திட்டங்கள் அமுலாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)


வணிக/கலை
(வெளிவாரி)
**முதற் தேர்வு - '98**
முகாமைத்துவம்
திரு. பசில் B.B.A.
ஆரம்பம்:
26/7 சனி பி.ப. 3.00
பொருளியல், ஆங்கிலம், தமிழ் மற்றும் விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
**SHAMROCK**
யா/ஈச்சமோட்டை வீதி.
(48566)

**யூனிவேர்சல்**
கந்தர்மடம்
**A/L 99**
**கணக்கியல்**
தனி வியாபார
முடிவுக் கணக்கு
சனி, ஞாயிறு 6-30 a.m.
காசேடு
சனி, ஞாயிறு 4-00 p.m.
திரு. S. தவராசா
(48581)

நீங்கள் பட்ட துன்பங்களை நீங்களே படித்துப்பாருங்கள்!
வரதர் எழுதிய
**யாழ்ப்பாணத்தார் கண்ணீர்**
கவிதை நூல்
**விலை ரூ. 20/-**
புத்தக விற்பனையாளர் தொடர்பு கொள்க:
**ஆனந்தா**
புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
(48579)


## அத்தியாவசிய சேவைகள் நாயகம்

# ஜூனைட்டின் இடத்துக்கு இதுவரை நியமனம் இல்லை

யாழ்ப்பாணம் ஜூலை 25 வடக்குக்கு நிவாரணப் பொருள்களை அனுப்பும் பணிகளுக்கு பொறுப்பான அத்தியாவசிய சேவைகள் நாயகம் பதவிக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அத்தியாவசிய சேவைகள் நாயகமாக பணியாற்றிய ஜூனைட் கப்பல் துறை அமைச்சுச் செயலாளராக பதவியேற்ற பின்னர் அப்பதவிக்கு வடமாகாண மீள்குடியமர்வு அதிகார சபைத்தலைவர் சோமபால குணதீர நியமிக்கப்படவிருந்தார்.

பின்னர் அந்த நியமனமும் இடம் பெறவில்லை.

ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள அத்தியாவசிய சேவைகள் நாயகம் திணைக்களம் தொடர்ந்து வடக்குக்கு உணவு அனுப்பும் பணியை மேற்கொண்டுள்ளது. (இ-3)

## அராலிச் சம்பவம்:

# சிப்பாய்கள் இருவரும் விளக்க மறியலில்

யாழ்ப்பாணம், ஜூலை 25 இம்மாதம் 11 ஆம் திகதி அராலி தெற்கில் மாணவி ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதான இரண்டு இராணுவச் சிப்பாய்களும் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் நேற்று யாழ். நீதிபதி ஏ.என். இராமச்சந்திரன் முன்னிலையில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதுதொடர்பான பொலீஸ் பரிசீலனை இன்னும் முடியவில்லை என்பதால் சிப்பாய்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பொலீஸார் கேட்டுக்கொண்டதையடுத்தே அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

## ஆசிரியர் பதவி உயர்வு பரீட்சை

கொழும்பு, ஜூலை 25 ஆசிரியர் சேவையில் முதலாந்தரத்துக்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை உட்பட 103 நிலையங்களில் நடைபெறும்.

அடுத்த மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கு சுமார் 14 ஆயிரத்து 800 ஆசிரியர்கள் தோற்றுகின்றனர். (இ-4)

## உணவு முத்திரை

யாழ்ப்பாணம், ஜூலை 25 யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோருக்கான அடுத்த கட்ட நிவாரணத்துக்கான உணவு முத்திரைகள் செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் மூலமாக இந்த முத்திரைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-3-100)

## பங்கீட்டுக்கு மண்எண்ணெய்

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைமூலம் பங்கீட்டுக்கு 2 லீற்றர் வீதம், கட்டுப்பாட்டு விலையில் மண்எண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. (இ-15)

## கூட்டுறவு பயிற்சி

கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பிரிவுப் பயிற்சி எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு கடந்த 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் 29 வெளிவாரி மாணவர்களும் 12 சங்கப் பணியாளர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-15)


அரியாலை
## விவசாயிகள் சம்மேளனம்

அரியாலைக்குட்பட்ட எல்லைக்குள் வயல் செய்யும் விவசாயிகளும், மேட்டு நிலப்பயிர் செய்பவர்களும் மேற்படி சம்மேளனத்தில் அங்கத்தவராகும்படி வேண்டுகிறோம்.

காலபோக விதை நெல் தேவைப்படுபவர்கள் 30 — 07 — 97-க்கு முன்னர் தங்கள் விவரங்களைப் பதிவு செய்யும்படி வேண்டுகிறோம்.

அங்கத்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு:

ஆ. சண்முகநாதன்
செயலாளர்
(48580) 200A கண்டி வீதி, அரியாலை.


## கண்ணீர் அஞ்சலி

### செல்லையா கந்தசாமித்துரை
(கட்டியப்பா)

எமது வணிகர் கழக முன்னாள் தலைவரும், மகளிர் கோட்டம் உரிமையாளருமாகிய செல்லையா கந்தசாமித்துரை அவர்கள்

சென்னை அப்பலோ மருத்துவமனையில் 24-07-97 அன்று காலமான செய்தி கேள்வியுற்று அதிர்ச்சியும் துயரும் அடைகின்றோம், அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை கண்ணீர் அஞ்சலிகளாக சமர்பிக்கின்றோம்.

— யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

[சி/1192]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாராயணன் இன்று பதவியேற்பு!



கே.ஆர். நாராயணன்

புதுடில்லி, ஜுலை 25
இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக கே. ஆர். நாராயணன் இன்று பதவி யேற்கிறார்.

நாடாளுமன்றத்தில் இன்று மாலை நடைபெறவுள்ள விசேட வைபவம் ஒன்றில் ஜனாதிபதியாக அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்.

நாராயணன் பதவியேற்றதும் அவருக்கு மரியாதை செலுத்துவதற்காக இருபத்தொரு பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப் படும்.

முன்னாள் ஜனாதிபதிகள், உபஜனாதிபதிகள் மற்றும் பிரதமர். முன்னாள் பிரதமர்கள் ஐக்கிய முன்னணி அமைச்சர்கள் மற்றும் எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் உட்படப் பலர் இன்றைய பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்,

இன்று பதவியேற்கும் கே. ஆர் நாராயணன் இந்தியாவில் முதன் முதலாக ஜனாதிபதிப் பதவிக்குவரும் பிற்படுத்தப் பட்ட சமூகத்தின் பிரதிநிதி என்ற பெருமையைப் பெறுகிறார்.

கேரள மாநிலத்தில் 1921 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வறிய குடும்பம் ஒன்றில் நாராயணன் பிறந்தார்.

கலாநிதிப்பட்டம் பெற்ற அவர் ராஜதந்திர சேவையில் சேர்ந்து வெளிநாடுகள் பலவற்றில் இந்தியத் தூதராகப் பணியாற்றினார்.

ஜவஹர்லால்நேரு பல்கலைக் கழகத்தில் இரண்டு ஆண்டுகள் துணைவேந்தராகப் பதவி வகித்த பின்னர் அவர் அரசியலில் பிரவேசித்தார்.

ஒரு ராஜதந்திரியாக அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த கே. ஆர் நாராயணன் 1992 இல் இந்தியாவின் உப ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

மியான்மர் நாட்டுப் பிரஜை ஒருவரை மணம் முடித்த அவருக்கு இரு புதல்விகள் உள்ளனர்.

இதேவேளை —

ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது. நேற்றிரவு இந்திய வானொலி மூலம் அவர் நாட்டு மக்களுக்குப் பிரியா விடை உரையாற்றினார். (ஐ)

# பாகிஸ்தான் மீண்டும் ஏவுகணைச் சோதனை

பாகிஸ்தான் மேலும் இரண்டு ஏவுகணைகளைப் பரி சோதித்துள்ளது.

தரையில் இருந்து வான் இலக்கைத் தாக்கும் ''ஹன்ஸா'' ஏவுகணையையும், டாங்கிகளைத் தாக்கும் ''பக்தர்சிவஹான்'' ஏவுகணையையுமே பாகிஸ்தான் வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளது.

பாகிஸ்தானிலேயே தயாரிக்கப்பட்ட இந்த இரு ஏவுகணைகளும் தலைநகருக்கு வடமேற்கே 100 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஓர் இடத்தில் பரிசோதிக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாத முற்பகுதியில் தரையில் இருந்து தரை இலக்குகளைத் தாக்கும் 800 கிலோ மீற்றர் வேகம் கொண்ட 'ஹத்தாம்' என்னும் ஏவுகணையை பாகிஸ்தான் பரிசோதித்துப் பார்த்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 'யுனிற்றா' இயக்கத்துக்கு ஐ. நா எச்சரிக்கை!

நியூயோர்க், ஜுலை 25
அங்கோலாவின் ''யுனிற்றா'' கிளர்ச்சிக்குழு அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இணங்காவிட்டால் அதற்கு எதிராகக்கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக ஐ நா. பாதுகாப்புச்சபை எச்சரித்துள்ளது.

1994 நவம்பரில் அங்கோலா அரசுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையின் அம்சங்களை அமுல் செய்யாவிட்டால் வர்த்தகரீதியிலும் போக்குவரத்து ரீதியிலும், தடைகளை விதிப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்றும் ஐ.நா. பாதுகாப்புச்சபை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வீரப்பனின் வீடியோநாடா கருணாநிதியிடம் கையளிப்பு

வீரப்பனுடன் காட்டில் பேச்சு நடத்தச் சென்ற தமிழக அரசின் பிரதிநிதியான 'நக்கீரன்' ஆசிரியர் ஆர். கோபால் வீரப்பனைச் சந்தித்துப் பேசிவிட்டு திரும்பியுள்ளார்.

வீரப்பன் கொடுத்தனுப்பிய 'வீடியோ' நாடா ஒன்றை அவர் தமிழக முதல்வரைச் சந்தித்துக் கையளித்தார். அத்துடன் வீரப்பனால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் ஒன்பது வனத்துறை அலுவலர்களும் கர்நாடக முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றையும் 'நக்கீரன்' ஆசிரியர் முதல்வர் கருணாநிதியிடம் ஒப்படைத்தார்.

பொது மன்னிப்பு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வீரப்பன்தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# இந்திய வானொலியும், தொலைக்காட்சியும் இனி கூட்டுத்தாபனத்தின் கீழ் செயற்படும்.

புதுடில்லி, ஜுலை 25
இந்தியாவில் வானொலி மற்றும் தொலைக்காட்சி என்பன அரசின் கட்டுப்பாடின்றி சுதந்திரமாக செயற்படும் விதத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

தூரதர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலி ஆகியனவற்றை நிர்வகிக்க சுய அதிகாரம் கொண்ட கூட்டுத்தாபனம் ஒன்றை அரசு அமைக்கவுள்ளது.

இந்தக் கூட்டுத் தாபனம் இந்திய ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் என அழைக்கப்படும்.

'பிரசார் பாரதி' எனப்படும் இந்தக் கூட்டுத்தாபனம் பி. பி. ஸி. நிறுவனம் போன்று சுதந்திரமான பொது ஒலிபரப்புக் கூட்டுத் தாபனமாக இயங்கும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் ஜெய்பால் ரெட்டி தெரிவித்தார்.

வாரியம் ஒன்றின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படும் இக் கூட்டுத்தாபனம் ஒலி மற்றும் ஒளிபரப்புத் தொடர்பாக நாடாளுமன்றத்துக்கு மட்டுமே பதில் கூறும். வேறு எந்த விதத்திலும் அரசு அதனைக் கட்டுப்படுத்தாது என்று தெரிவிக்கப்பட்டது (ஐ)

## யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தில்

# ஆயிரத்து 600 பேருக்கு செயற்கை அவயவங்கள்

10 ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகின்ற யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் கடந்த 10 ஆண்டுகளில் ஆயிரத்து 521பேருக்கு செயற்கை கால்களையும், 93 பேருக்கு செயற்கைக் கைகளையும் பொருத்தியுள்ளது.

இதைவிட ஜெய்ப்பூர் நிறுவனம் 115 பேருக்குமுச்சக்கர வண்டிகளையும், 50 பேருக்கு முச்சக்கர கதிரைகளையும் வழங்கியுள்ளது.

அவயவங்களை இழந்தோருக்கு 1500-க்கு மேற்பட்ட செயற்கை உபகரணங்களும் உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

யுத்தத்தின் காரணமாகவும் கொடிய நோய்கள் காரணமாகவும் அவயவங்களை இழந்தோரும், அவயவங்கள் செயலற்றுப் போனோரும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் சேவையால் வாழ்வில் மறுமலர்ச்சி கண்டுள்ளனர்.

கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ். கிளையினால் நடத்தப்படும் யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டம் நாளை சனிக்கிழமையுடன் தனது 10 ஆண்டுகால சேவையை நிறைவு செய்து 11 ஆவது ஆண்டில் காலடி பதிக்கிறது.

10 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வைபவம் நாளை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# உரும்பிராய்ப்பகுதிக்கு மின் வழங்க வலு குறைந்த ஜெனரேற்றர்

## 100 இணைப்புகளே வழங்க முடியும்

உரும்பிராய், ஜுலை 25
உரும்பிராய்ப் பகுதிக்கு மின் விநியோகிப்பதற்காக 100 கே. வி. வலுவுள்ள ஜெனரேற்றர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 100 வீடுகளுக்கு மட்டுமே திருப்தியாக மின் வழங்க முடியும் என்று மின் அத்தியட்சகர் ஏ. நாகராசா தெரிவித்தார்.

மின் வழங்கக் கோரி இதுவரை 550- க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

தற்போது மின் வசதி பெற்றுள்ளோர் கூடிய மின்குமிழ்களைப் பாவிப்பதால் பளு அதிகரித்து ஜெனரேற்றர் அடிக்கடி செயலற்றுப் போவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உரும்பிராய்ப்பகுதியில் கூடுதலானோருக்கு மின் வழங்க வசதியாக கூடிய வலு கொண்ட ஜெனரேற்றர் ஒன்றை ஒதுக்குமாறு இப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர் (ஐ-154)

# கல்விக் கல்லூரிக்கு அனுமதி

வவுனியா, ஜுலை 25
வவுனியா கல்விக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 10 ஆம், 11 ஆம், 12 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக்கல்வி, உடற்கல்வி ஆகிய துறைகளுக்கு மாணவர்களை அனுமதிக்க இந்த நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

வவுனியா கல்விக் கல்லூரி முதல்வர் த. அழகரத்தினம் தலைமையிலான குழு நேர்முகப் பரீட்சைக்காக யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

இம்முறை கூடுதலான மாணவர்கள் அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளதால், வெட்டுப்புள்ளி கூடுதலாக இருக்கும் எனத் தெரிவிக்கப் பட்டது. (இ-3)

# பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜுலை 25
யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் 5 மாதகால மனைப்பொருளியல் அடிப்படைப் பயிற்சி நெறி இன்று காலை 9.30 மணிக்கு ஏழாலை கிராமிய வங்கி மேல்மாடிக் கட்டடத்தில் உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 6 இடங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 45 பயிற்சியாளர்கள் இந்த இலவசப் பயிற்சி நெறியில் கலந்து கொள்கின்றனர். (ஐ)

# வறட்சியால் எழுவைதீவில் கிணறுகள் வற்றின

தென்மராட்சி, ஜுலை25
ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட எழுவை தீவில் உள்ள கிணறுகளில் கடும் வெப்பம் காரணமாக தண்ணீர் வற்றி விட்டதால் இப்பகுதி மக்கள் குடி தண்ணீர் பெற பெரிதும் கஷ்டமுறுகின்றனர்.

தினமும் இப்பகுதி மக்கள் குடி தண்ணீர் எடுப்பதற்காக காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களுக்கு தண்ணீர் பரல்களுடன் படகுகளில் செல்வதாகத் தெரிவித்தனர்.

இத் தீவில் 110 குடும்பங்கள் குடியிருப்பதாகவும் கடந்த வருடம் மழை வீழ்ச்சி குறைந்ததால் கிணறுகளில் தண்ணீர் வற்றிவிட்டதாகவும் தெரிவித்தனர். (ஐ - 117)

# வீட்டின் மீது தென்னை வீழ்ந்து குழந்தை பலி!

தென்மராட்சி ஜுலை 25
கடந்த வருடம் இடம் பெற்ற ஷெல் வீச்சினால் சேதமடைந்திருந்த 50 அடி உயரமான தென்னை மரம் ஒன்று சரிந்து வீட்டின் மேல் வீழ்ந்ததால் வீட்டினுள் படுத்திருந்த ஒருவயது பெண் குழந்தை பலியான சம்பவம் மிருசுவில் கெற்பலியில் இடம் பெற்றது.

தென்னை மரம்வீழ்ந்ததில் வீடு முற்றாக வீழ்ந்து சேதமடைந்த போதிலும் வீட்டினுள் படுத்திருந்த இக் குழந்தையின் பெற்றோரும் ஐந்து சகோதரர்களும் உராய்வுக் காயங்களுடன் மயிரிழையில் தப்பினர்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எஸ். ஏ. ஈ. ஏகநாதனின் பணிப்பின்பேரில் சாவகச்சேரி திடீர் மரணவிசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் விசாரணை நடத்தி விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார்.

இச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் புஷ்பவதி என்னும் குழந்தையே மரணமானது. (இ 117)

# கணக்கு அறிக்கை கிடைக்கவில்லை

நெடுந்தீவு, ஜுலை 25
ஊழியர் சேமலாப நிதி குறித்த கணக்கு அறிக்கைகள் 1993 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கை மத்திய வங்கியிடம் இருந்து தமக்குக் கிடைக்கவில்லை என நெடுந்தீவு பல நோ. கூ: சங்க ஊழியர்கள் தெரிவித்தனர்.

மூன்று வருடங்களுக்கு முன் மத்திய வங்கியில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து தமது சேமலாப நிதிக் கணக்கு விவரங்கள் மத்திய வங்கியில் பாதுகாப்பாக உள்ளதா அன்றேல் அழிந்து போய்விட்டனவா என்பது குறித்து ஊழியர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர்.

(ஐ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திச் சாரம்

### டாக்டர்கள் வருவர்

திருநெல்வேலி, ஜூலை 25
யாழ். மாவட்ட அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட டாக்டர்களில் மேலும் சிலர் இன்று வெள்ளிக்கிழமை இங்கு விமான மூலம் வந்தடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பற்றிய தகவல் ஒன்றை கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்கள தலைமைப்பீடம் இங்கு அனுப்பி வைத்துள்ளது. (ஐ-135)

### உதவிப்பணம் 6 மாதகால கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூலை 25
வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான கடந்த ஆறு மாதங்களுக்கான கொடுப்பனவு தற்போது தபாலகங்களில் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-111)

### மாணவர் தலைவர்கள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 25
''யுனெஸ்கோ'' நிறுவன ஆதரவில் நடத்தப்படும் மாணவர் தலைவர்களுக்கான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
வலயம், ஒன்றைச் சேர்ந்த 'ஏ', 'பி', 'சி' தர பாடசாலைகள் ஒவ்வொன்றில் இருந்தும் மாணவ தலைவர்கள், உதவி மாணவதலைவர்கள் (Prefcts) ஆகியோரில் இருவரை இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

### சந்தை புனரமைப்பு

தென்மராட்சி, ஜூலை 25
ஊரிகாவற்றுறைப்பொதுச் சந்தை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினால் ஆறு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.
கட்டட புனரமைப்பு வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. இக் கட்டட திறப்பு விழா விரைவில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### கே. டானியல் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம் ஜூலை 25
யாழ். பல்கலைக்கழக தமிழ்மன்றம் நடத்தும் கே. டானியல் ஆய்வரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.
இந்த ஆய்வரங்கில் 'பன்முக நோக்கில் டானியல்'' என்ற தலைப்பில் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் நா. சுப்பிரமணியனும், ''டானியல் என்ற படைப்பாளி'' எனும் தலைப்பில் பதிவாளர் க. குணராசாவும், ''டானியலின் படைப்புக்களின் நடைநயம்'' என்னும் தலைப்பில் முதுநிலை விரிவுரையாளர் ம. ரகுநாதனும் உரையாற்றுவர்.
பொருளியற்றுறைத் தலைவர் வி. பி. சிவநாதன். விரிவுரையாளர் ,இரா. சிவச்சந்திரன் ஆகியோர் கருத்துரையாற்றுவர். (ஐ)

### இலவச வைத்திய பரிசோதனை

திருநெல்வேலி, ஜூலை 25
யாழ். லயன்ஸ் கழகம் யாழ். சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் இலவச வைத்திய பரிசோதனை ஒன்றை எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று நடத்தவுள்ளது.
யாழ். லயன்ஸ் கழக தலைவர் எஸ். என். கதிரவேலு இத் தகவலை தெரிவித்தார். (ஐ-135)

### சித்திர போட்டி ஆக்கங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 25
'யுனெஸ்கோ' நடத்தும் சித்திர, கேலிச் சித்திரப் போட்டிகளுக்கான ஆக்கங்களை இதுவரை ஒப்படைக்காத வலயம் ஒன்றைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் அவற்றை எதிர்வரும் திங்கட்கிழமை வலயம் — 1 பணிமனையில் ஒப்படைக்குமாறு உதவி இணைப்பாளர் கேட்டுள்ளார். (ஐ)

### பாற்குளம் அணைக்கட்டு வேலைகள்

கொய்யாத்தோட்டம் பகுதியில் உள்ள பாற்குளத்தின் அணைக்கட்டுப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இதற்கென யாழ். பிரதேச செயலகத்தினால் 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-100)

### 'உதயதாரகை' சேவையில்

நெடுந்தீவு ஜூலை 25
நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத்துக்குச் சொந்தமான ''உதயதாரகை'' என்னும் படகு திருத்தப்பட்டு நெடுந்தீவு கடற்போக்குவரத்துச் சேவையில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளது. (ஐ-111)

### அனலைதீவு உற்சவத்தில் யாழ். பக்தர்கள்

அனலைதீவு நயினாகுளம் ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் ஆலய மகோற்சவ உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையான குடாநாட்டு மக்கள் இம்முறை கலந்து கொண்டனர். (ஐ-117)

### விளையாட்டு நிகழ்வு

யாழ். மத்திய கல்லூரியின் 181 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க ஆதரவில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 6 பேர் கொண்ட 6 ஓவர்கள் கிறிக்கெட் போட்டி நாளையும், நாளை மறுதினமும் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
13 பிரபல கிறிக்கெட் கழகங்கள் இதில் பங்குபற்றுகின்றன. (ஐ)

### ஆசிரியர்கள் கௌரவிப்பு

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் ஜி. சி. ஈ சாதாரண தரப்பரீட்சையிலும், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையிலும் மாணவர்கள் கூடுதல் புள்ளிபெற்றுச் சித்தியடையக் காரணமாயிருந்த ஆசிரியர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்ச்சி நாளை சனிக்கிழமைபிற்பகல் 3 மணிக்கு துரைசிங்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.
இந்த வைபவத்தில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு ''குருசேவ கலாமணி'' விருதுகள் வழங்கப்படவுள்ளன. பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டகல்வி அதிகாரி ரீ. இராசேந்திரம் கலந்து கொள்வார். (ஐ-15)

### நயினாதீவு துறைமுகப்பாலம் திருத்தப்படும்

நெடுந்தீவு, ஜூலை 25
நயினாதீவு துறைமுகப் பாலம் விரைவில் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கென கருத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வேலணை உதவி அரசாங்க அதிபர் ஆ. தியாகராசா தெரிவித்தார். (ஐ-111)

### விசேட அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ். நகர் மேற்கு (ஜே – 73) கிராம அலுவலர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை சனிக்கிழமை காலை 10 மணி முதல் கிராம அலுவலரின் அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளன. (ஐ)

### மஹரகமையில் 3 லட்ச ரூபா கொள்ளை

கொழும்பு, ஜூலை 25
மஹரகமை பலம்நாக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவுக் கடைகளில் இருந்து அன்றாட பணவசூலிப்பு பணமான மூன்று லட்சம் ரூபா கடந்த திங்களன்று மாலை இனந் தெரியாத ஆயுதபாணிகளால் கொள்ளையிடப்பட்டது. (ஐ)

## கசிப்பு வியாபாரம் அராலியில் அதிகரிப்பு

வட்டுக்கோட்டை ஜூலை 25
அராலிப் பகுதியில் கசிப்பு வியாபாரம் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.
மதுப்பிரியர்கள் மக்கள் மீளக் குடியமராத வீடுகளுக்குள் நுழைந்து வீடுகளில் இருக்கக் கூடிய பெறுமதியான பொருள்களை எடுத்துச் சென்று மது விற்பனையாளரிடம் கொடுத்து தமது மதுத் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.
சிறுது காலம் தடைப்பட்டிருந்த கசிப்பு விற்பனை மீண்டும் பலரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கசிப்பை அருந்திவிட்டு தங்களுக்குள் மோதிக் கொள்ளும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. (ஐ-172)

### நோயாளர்கள் புறப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 25
மேலதிக சிகிச்சைக்காக குடாநாட்டில் இருந்து கொழும்பு செல்லும் நோயாளர்களை ஏற்றிக்கொண்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் நேற்று முன்தினம் பிற்பகல் காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலை நோக்கிப்புறப்பட்டது.
நோயாளர் யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் வாகனங்களில் அவர்களின் உதவியுடன் காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ-15)

### விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
கோண்டாவில் கிழக்கில் நேற்று இடம் பெற்ற ''வாண்ட்'' மாஸ்டர், சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். சைக்கிளில் சென்றவரான கோண்டாவிலைச் சேர்ந்த தம்பித்துரை செல்வநாதன் (வயது 47) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

### கூட்டுறவு பயிற்சி நெறி விண்ணப்பம்

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள கனிஷ்ட பிரிவுக்கான கூட்டுறவுப் பயிற்சிநெறிக்கு கூட்டுறவுப் பணியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
சங்கப் பணியாளர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிக்கலாம். (ஐ-15)

## 'யுனெஸ்கோ' இலக்கியப் போட்டி; பருத்தித்துறை கோட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 25
''யுனெஸ்கோ'' நிறுவனத்தின் ஆதரவில் பருத்தித்துறை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை, பேச்சுப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு:

**கட்டுரைப் போட்டி**

**பிரிவு 1**

★ 1ஆம்இடம்-ப.வைதேகி -(தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்.)
★ 2ஆம் இடம்-தே.லக்சுமி -(அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாலயம்.)
★ 3ஆம் இடம்-ஸ்ரீ.விஜிதா -(தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்.)

**பிரிவு 2**

★ 1ஆம்இடம்-ஆ.நிகல்யா -(வல்வை சிவகுரு வித்தியாலயம்.)
★ 2ஆம் இடம்-ஜெ.காயத்திரி-(வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.)
★ 3ஆம்இடம்-ப.டிலக்ஷா -(கெருடாவில் இ.த.க. பாடசாலை.)

**பிரிவு 3**

★ 1ஆம்இடம்-இ.அனித்தா (வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.)
★ 2ஆம் இடம் - சி. மணிமாலா (பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் )
★ 3ஆம் இடம்-பா.பத்மாஜினி (மெதடிஸ்த பெ. உ. பாடசாலை.)

**பிரிவு 4**

★ 1ஆம் இடம்-அ. ராதை (வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.)
★ 2ஆம் இடம் - பா. பிரதீபன் (ஹாட்லிக் கல்லூரி.)
★ 3ஆம்இடம்-சா.சுஜாதா (சென். தோமஸ் றோ.க.பெ. பாடசாலை.)

**பிரிவு 5**

★ 1ஆம் இடம்-ப.தனுஷா (வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.)
★ 2ஆம் இடம்-ச. தர்சினி (வல்வை மகளிர் வித்தியாலயம்.)
★ 3ஆம் இடம்-வே. நந்தகுமார் (ஹாட்லிக் கல்லூரி.)

**கவிதைப் போட்டி**

**பிரிவு 4**

★ 1ஆம்இடம்-மு.குமுதினி (மெதடிஸ்த பெ. உ. பாடசாலை.)
★ 2ஆம்இடம் - ப. ரமேஷ் (ஹாட்லிக் கல்லூரி.)
★ 3ஆம்இடம்-யோ. மேரி பற்றிமா (சென். தோமஸ் றோ. க. பெ. பாடசாலை.)

**பிரிவு 5**

★ 1ஆம் இடம் - பா. சோபனா (வட.இந்து மகளிர் கல்லூரி.)
★ 2ஆம் இடம்-செ. பஞ்சகல்யாணி (மெதடிஸ்த பெ. உ. பாடசாலை.)
★ 3ஆம்இடம்-ப.கல்யாணி (வட இந்து மகளிர் கல்லூரி.)

**பேச்சுப் போட்டி**

**ஆரம்ப பிரிவு**

★ 1ஆம்இடம்-சி.கோபிகா (புற்றளை மகா வித்தியாலயம்.)
★ 2 ஆம் இடம்- பு. சௌமியா (வட. இந்து மகளிர் கல்லூரி.)
★ 3 ஆம்இடம்-ம.றொசரியினி (சென். தோமஸ் றோ. க. பெ. பாடசாலை.)

**கனிஷ்ட பிரிவு**

★ 1 ஆம் இடம்- பா. லோஜினி (மெதடிஸ்த பெ. உ. பாடசாலை.)
★ 2 ஆம் இடம்- இ. உமா (வட.இந்து மகளிர்கல்லூரி.)
★ 3 ஆம் இடம்- ஞா. கோபிகா (மெதடிஸ்த பெ. உ. பாடசாலை.)

**கனிஷ்ட இடைநிலை**

★ 1 ஆம் இடம்- பா. பத்மாஜினி (மெதடிஸ்த பெ.உ. பாடசாலை.)
★ 2ஆம் இடம் - அ. நளாயினி (வட. இந்து மகளிர் கல்லூரி.)
★ 3ஆம்இடம்-ம. தாரணி (வட.இந்து மகளிர்கல்லூரி.)

**மேற் பிரிவு**

★ 1ஆம் இடம் - த. உமா (வட. இந்து மகளிர்கல்லூரி.)

(ஐ-5)

## 'யுனெஸ்கோ' பேச்சுப்போட்டி; கரவெட்டி கோட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 25
''யுனெஸ்கோ'' நிறுவனத்தின் ஆதரவில் கரவெட்டி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற பேச்சுப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**ஆரம்பப்பிரிவு**

★ 1 ஆம் இடம் — வி. வினித்தா (ஞானசாரியார் கல்லூரி.)
★ 2 ஆம் இடம் — ந. ஜீவினா — (ஞானசாரியார் கல்லூரி.
★ 3 ஆம் இடம் — ம. கஸ்தூரி (ஞானசாரியார் கல்லூரி.)

**கனிஸ்ட இடைநிலை பிரிவு**

★ 1 ஆம் இடம் இ. சிவ[illegible] (ஞானசாரியார் கல்லூரி.)
★ 2 ஆம் இடம் — க. யாழினி (விக்னேஸ்வரா கல்லூரி.)
★ 3 ஆம் இடம் — ச. காயத்திரி (ஞானசாரியார் கல்லூரி.)

**கனிஷ்ட நிலை**

★ 1 ஆம் இடம் — ச. சிம்மதி (ஞானசாரியார் கல்லூரி.)
★ 2 ஆம் இடம் — சி. கார்த்திகா (ஞானசாரியார் கல்லூரி.)
★ 3 ஆம் இடம் — கி. சாமந்தி (ஞானசாரியார் கல்லூரி.)

**மேற்பிரிவு**

★ 1 ஆம் இடம் — ச.வசந்தகுமார் (ஞானசாரியார் கல்லூரி.)
★ 2 ஆம் இடம் — சு. புவிதா (ஞானசாரியார் கல்லூரி.)
★ 3 ஆம் இடம் — வை. ரவிசங்கர் (ஞானசாரியார் கல்லூரி.)

(ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம்

நாட்டின் சூழ்நிலை காரணமாக செயற்படா திருக்கும், உடுவிலில் இயங்கி வந்த விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் எதிர்கால செயற்பாடுகள் பற்றித் தீர்மானிப்பதற்காக கொக்குவில் இந்துக் கல்லூரியில் 27 - 07 - 97 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம் பெறவிருக்கும் கலந்துரையாடலில் நிர்வாகசபை, பொதுச் சபை உறுப்பினர்களும், பெற்றோர், வாழ்வகத்தின் நலனில் அக்கறையுடையோர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகசபை,
விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம்,
உடுவில்.

(சி/ 1187)



## சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலயத் திருவிழா

வெளி இடங்களில் வசிக்கும் புனித யாகப்பர் ஆலய பங்கு மக்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க மேற்படி புனித யாகப்பர் ஆலயத் திருவிழா இம்மாதம் 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்; 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வண. றோக அடிகளார் அவர்களின் திருநாள் திருப்பலி பூசையுடன் முடிவடையும்.

பங்குச்சபை

சில்லாலை தெற்கு.

(48570)



இணையாணன்

## சிறி முருகன் ஆலய வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

மேற்படி சீட்டிழுப்பு 23 - 07 - 97 இல் நடைபெற்றது

1 ஆம் பரிசு 8654
2 ஆம் பரிசு 444
3 ஆம் பரிசு 5557

| ஆறுதல் பரிசில்கள்: | | | |
|---|---|---|---|
| | 8891 | 8033 | 9932 |
| | 7064 | 5471 | 8800 |
| | 3536 | 4984 | 8812 |
| | 5559 | | |

- பரிபாலன சபையினர்

(48569)



## வெளிவாரிப் பட்டப் படிப்புப் பதிவு 1996/97

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 1996 / 97 ஆம் கல்வியாண்டுக்குப் பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து 30 - 08 - 1997 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி.
2. கலை முதற் கற்கை நெறி.
3. பொதுக் கலை மாணி பகுதி 1
4. சிறப்புக் கலை மாணி பகுதி 1
5. வர்த்தகமாணி பகுதி 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலை மாணி பகுதி 1 கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்,

★ விண்ணப்பப் படிவம் ரூபா 15.00

★ பாடத்திட்டமும் விதி முறைகளும் ரூபா 35.00 (முதற்கலை / முதல் வர்த்தக நெறிகளுக்கானது)

★ பாடத்திட்டம் ரூபா 50.00 (சிறப்புக் கலைமாணி, வர்த்தகமாணி பகுதி 1 பாடநெறிகளுக்கு)

★ பாடத்திட்டம் ரூபா 15.00 (பொதுக் கலை மாணி பகுதி 1 ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும்)

★ விதிமுறைகள் - கைநூல் ரூபா 25.00 (சகல பகுதி 1 பாட நெறிகளுக்கும்)

விண்ணப்பப் படிவத்தையும் பாடத் திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைசமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் பெற விரும்புவோர் தமது பாடநெறியை/கற்க விரும்பும் பாடங்களை குறிப்பிட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூ 11/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ. மீ அளவுடைய தபால் உறையினை அனுப்புதல் வேண்டும்.

ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/1184)


## சமய சந்திதிகளில்

மீசாலை கிழக்கு நெல்லியடி முருகன் ஆலய மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

ஒகஸ்ட் இரண்டாம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு தேர் உற்சவமும், மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(ஐ-117)

★ ★ ★

கிளாலி புனித யாகப்பர் தேவாலய திருநாள் ஆராதனைகள் கூட்டுத் திருப்பலியாக இன்று வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு கிளாலி புனித அந்தோனியார் தேவாலயத்தில் பங்குத் தந்தை அருட் திரு. பீற்றர் துரைரத்தினம் அடிகளால் ஒப்புக் கொடுக்கப் படும்.

கிளாலி கடற்கரையை அண்டிய பகுதியில் புனித யாகப்பர் தேவாலயம் அமைந்துள்ளதாலும் இங்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்படாததாலும் கடந்த மாதம் தேவாலய திருநாள் நடத்த முடியாமற்போயுள்ளது.

(ஐ-171)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 25

பண்டத்தரிப்பு, பனிப்புலம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவம் நாளை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் 6 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

(ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய வருடாந்த திருவிழாவின் 8 ஆம் நாளான இன்று வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு "அன்பிய வழியில் எத்தனை தடைகள்" என்னும் தலைப்பில் ஆலயப்பங்குத் தந்தை அருட்திரு. ம. வி. இ. ரவிச்சந்திரன் உரையாற்றுவார்.

(ஐ-30)

★ ★ ★

ஊரெழு கிழானைப் பதி ஸ்ரீ பார்வதவர்த்தனி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

(ஐ)


**BOSCO INSTITUTE**

25, றக்கா றோட்

**A/L 99**

ஆரம்பவகுப்புக்களை தவறவிட்டமாணவர்களுக்காக ஆரம்பத்தில் இருந்து

**PHYSICS**

BY:

ஸ்பெல்மன்

ஆரம்பம்: 25.07.97

பி.ப 4.00 - 500

(48574)



**99 A/L**

பொருளியல்

திரு. இளங்கோ [B. A]

உ/தி சாத்திய வளைவி

ஆரம்பம்: 25 - 07 - 97

பி. ப. 3-00 - 4-00

(48576)


ஆனைக்கோட்டை- நவாலி வீதியில்

## வேலி மறைப்புகள் அகற்றப்படுகின்றன

ஆனைக்கோட்டை — நவாலி பிரதான வீதியின் இரு மருங்கிலுமுள்ள வீட்டு வேலிகளின் மறைப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

இவ்வேலிகளின் கதிகால்கள் மற்றும் மரக்கிளைகள் யாவும் வெட்டப்பட்டுள்ளன. வீதியோரம் உள்ள பற்றை வளவுகள், காணிகள் யாவும் துப்புரவு செய்யப்படுகின்றன.

(ஐ-100)

## முத்திரையிடப்படாத தராசு படிகள் பாவனை

தென்மராட்சி, ஜூலை 25

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சந்தைகளிலும் வர்த்தக நிலையங்களிலும் முத்திரையிடப்படாத தராசு படிகள் பாவிக்கப் படுவது குறித்து பொது மக்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த மாதம் சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும், கொடிகாமம் கிராம சபை அலுவலகத்திலும் யாழ். அளவை நிறுவைத் திணைக்களத்தினால் முத்திரையிடும் பணி இடம்பெற்ற போதிலும் பல வியாபாரிகள் முத்திரையிடப்படாத படிகளையும், சைக்கிள் நடு அச்சுகளையும் பயன்படுத்திவருவது குறித்தும் கவலை தெரிவித்தனர்.

(ஐ - 117)

## சங்க கிளைகள் திறக்கப்பட்டன

கொழும்புத்துறை, ஜூலை 25

இடம் பெயர்ந்த குடும்பங்கள் மீளத் திரும்பியுள்ளதை அடுத்து சங்கானை ப. நோ. கூ. சங்கம் தனது மூன்று கிளைகளை மீண்டும் திறந்துள்ளது.

அராலி வடக்கு, சிலம்புப் புளியடி, தொல்புரம் மேற்கு ஆகிய இடங்களில் உள்ள கிளைகளே திறக்கப்பட்டுள்ளன.

(ஐ-30)


**J. T. C. கல்வி நிலையம்**

பாங்ஷால் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்

**A/L 98, 99 புதிய பிரிவுகள்**

பொருளியல் - M. விக்கி

(B.A. ECO. SP.) HONS.

99 - விலைக் கோட்பாடு 25 - 07 - 1997 நேரம் 3 மணி
98 - வரவு செலவுத் திட்டம் 01 - 08 - 1997 நேரம் 4 மணி

(48573)



## புலமைப் பரிசில் ' 97

எமது நிறுவனத்தில் நடந்த 3 ஆவது மாதிரிப் பரீட்சையில்

1) தியாகராஜா சுகந்தன் - 167 புள்ளிகள்
சென். ஜோண் பொஸ்கோ
2) கணேசமூர்த்தி ஸ்ரீபவன் - 160 புள்ளிகள்
சோதி வேம்படி வித்தியாலயம்
3) தனரஞ்சிதராஜன் நிரஞ்சன் - 159 புள்ளிகள்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
3) பிரியங்கரி சத்தியசீலன் - 159 புள்ளிகள்
சென். ஜோண் பொஸ்கோ

இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்

27—07—1997 ஞாயிறு 4ஆவது மாதிரிப்பரீட்சை வழமைபோல் நடைபெறும்.

- இப்பரீட்சைகளில் எவரும் கலந்து கொள்ளலாம்.
- இப்பரீட்சைக்காக இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
- பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் - எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைப் பகுதி Bond Institutes

58A, ஸ்ரான்லி வீதி (48572) யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணம்

ஜெய்ப்பூர் செயற்கை கால் திட்டத்தின் முகாமைத்துவ குழுவும், பணியாளர்களும்

எமது செயற்கை அவயவப் பாவனையாளர்களையும், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகளையும், நண்பர்களையும்

## பத்தாவது ஆண்டு சேவை நிறைவு விழாவில்

கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாள்:- 26 - 07 - 1997 சனிக்கிழமை.
இடம்:- நாவலர் மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
நேரம்:- காலை 9.00 மணி (புதியநேரம்)

பிரதம விருந்தினர்:
திரு. வே. பொ. பாலசிங்கம்
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

5, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1188)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிறுபிள்ளைகளின் முடித் தொப்பி, கம்பஸ்பாக், கதிரை, பாக் பின்னும் வயர்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: நாகவிகாரை முன்பாக 'ராஜன் பின்னலகம்', ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். [48562]

நல்ல நிலையில் உள்ள T.V 2032 (கலர்) டெக் (F)பான், Stand (F) பான் விற்பனைக்குண்டு. தொடர்பு: சோ. நடராஜா, பழைய தபாற் கந்தோர், நீர்வேலி வடக்கு. [48567]

### உடன் விற்பனைக்கு

யாழ் நகரில் 3 ஆம், 4ஆம் குறுக்குத்தெரு சந்தியில் இரண்டு வீடுகள், ஒன்று 5 அறைகளுடன் மற்றையது 4 அறைகளுடன் கார் விடும் கராஜ் வசதியோடு கூடிய, சகல வசதியுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 201/1, 3 ஆம் குறுக்குத் தெரு, அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம் [48538]

### மணமகன் தேவை

சைவசமய கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 29 வயது ஆசிரியைக்கு தகுந்த மணமகன் எதிர்பார்க்கப் படுகிறது. அரச தொழில் விரும்பத்தக்கது நல்லபொருளாதார பின்னணி உண்டு. தொடர்பு: மே/பா 641, உதயன்பணிமனை, யாழ்ப்பாணம். [48548]

### வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர்வித்தியாலயத்துக்கும் பரி.யோவான் கல்லூரிக்கும் கச்சேரிக்கும் மிக அண்மையில் உள்ள $2\frac{1}{2}$ ப்பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. இதைவிட 1 பரப்பு காணி தென்னை, பலா, எலுமிச்சம்மரம் ஆகியவற்றுடன் கூடியவையும் விற்பனைக்குண்டு. தொடர்பு; சி. இரத்தினசிங்கம், 138, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் [48456]

### வகுப்புக்கள்

பௌதிகவியல், கணித வகுப்புக்கள் கற்பிக்கப்படும். A/L 98, 99 ஆண்டுகளுக்கான குழு பௌதிக வகுப்புக்கள், ஆண்டு 11, 10 இற்கான கணித பிரத்தியேக வகுப்புக்கள் கற்பிக்கப்படும். ஆசிரியர்: S, சுகேந்திரன். BSc (Special), பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. [48560]

### திருமணசேவை

எம்மிடம் சகல உத்தியோகத்திலும், சகல மதத்திலும் ஆண், பெண் இருபாலாரும் உண்டு. தொடர்பு: துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [48537]

### FOR SALE

EncycloPaedia Britanica, Fourteenth Edition For Sale Contact Only Sunday 47, SengunTha veethy, Thirunelvely East, Jaffna [48568]

## காங்கேசன் தபாலகம் சுன்னாகத்தில் இயங்கும்

யாழ்: பிரதம தபால் அலுவலகத்தில் தற்போது இயங்கி வரும் காங்கேசன் துறை தபால் அலுவலகம் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் சுன்னாகம் பிரதான வீதியிலுள்ள கட்டடம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. இயங்கத் தொடங்கியதும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கல் காசுக்கட்டளை (மணிஒடர்) மாற்றுதல் ஆகிய சகல பணிகளும் அங்கு மேற்கொள்ளப்படும்.

யாழ். பிரதம தபாலகத்தில் செயற்பட்ட காலத்தில் இத்தபால் அலுவலகம் தபால் விநியோகத்தில் மட்டுமே ஈடுபட்டு வந்தது. (ஐ-135)

## வாழ்த்துகிறோம்

எமது கல்லூரி அதிபராக கடந்த நான்கு ஆண்டுகளாக அளப்பரிய சேவையாற்றி 21 - 07 - 97 இல் தேசிய பாடசாலையாகிய யாழ். இந்துக்கல்லூரிக்கு அதிபராகப் பதவி ஏற்ற

**திரு. அருணாசலம் சிறிக்குமாரன்**

அவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்தும்:

உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ அருணோதயக் கல்லூரி.

(47344)

## வாழ்த்துகின்றோம்

எமது கிராம அலுவலராக கடந்த $34\frac{1}{2}$ வருடங்கள் சிறந்த சேவையாற்றி 23-07-97இல் இளைப்பாறிய

**உயர்திரு. செல்லையா வேதராசா**

அவர்களை

சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

கு. தி, நாயகம்
மானிப்பாய்.

(47343)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## கடைகள் வாடகைக்குக் கொடுப்பதற்கான
## கேள்வி அறிவித்தல்

01. கீழே அட்டவணையிலுள்ள கடைகளில் 1997 - 08 - 01 தொடக்கம் 1998 – 12 – 31 வரை வியாபாரம் செய்யும் உரிமைக்கான கேள்விகள் அழைக்கப்படுகின்றன.
02. கேள்விப் பத்திரங்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரக் கட்டணமும், கேள்விப் பிணையும் செலுத்தி 1997 - 07 – 29 ஆம் திகதி நண்பகல் 12 - 00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
03. கேள்விப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து 1997 - 07 - 30 ஆம் திகதி முற்பகல் 10-00 மணிக்குள் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
04. கேள்விப் பத்திரங்கள் 1997 - 07 31 ஆம் திகதி முற்பகல் 10 - 00 மணிக்குத் திறக்கப்படும்.
05. மேலதிக விவரங்களைத் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| விவரம் | மாத வாடகை | நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கேள்வி (உரிமை)த் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்கப்படாதது) |
|---|---|---|---|---|
| 1. வட்டுக்கோட்டை நவீன சந்தைக் கடைகள் | | | | |
| இல. 3, 4 | 125/- | 5,000-00 | 500-00 | 100-00 |
| இல. 1, 6 | 135/- | | | |
| இல. 2, 5 | 225/- | | | |

கா. சந்திரராசா,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

வலி. மேற்கு பிரதேச சபை,
தலைமையலுவலகம்,
சுழிபுரம்,
1997 – 07 - 17

## ஏ. ஆர்.வி. மருந்து

யாழ். சுகாதார திணைக்களத்திற்கு ஏ. ஆர். வி எனப்படும் விசர்நாய்க்கடித் தடுப்பு ஊசி மருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எதிர்வரும் 30 ஆம் திகதி இங்கு எடுத்துவரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## 31-ம் நாள் சபிண்டீகர அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் பொன்னையா சிதம்பரம்மா

வரவு: 1913 - 11 - 11 பிரிவு: 1997 - 06 - 25

அல்லாரை வடக்கு மீசாலையைச் சேர்ந்த கண் வைத்தியர் குஞ்சுத் தம்பி என அழைக்கப்படும் ஆறுமுகம் பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும் நாகராசாவின் அன்பு மாமியாரும், பராசக்தியின் அன்புத் தாயாரும், நாகேஸ்வரன், தயாபரன், கிருபாகரன், சிவசக்தி, நாகசக்தி, சிவாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாகிய திருமதி பொன்னையா சிதம்பரம்மா அவர்கள் 1997 – 06 - 25 புதன்கிழமை எம்மையெல்லாம் பிரிய நாம் வருந்துகையில்; அன்றைய இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன்;

1997 – 07 - 25 வெள்ளிக்கிழமை நிகழ இருக்கும் அன்னாரின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

பேரப்பிள்ளைகள்.

கிருபா வீடியோ அன்ட் போட்டோ,
அல்லாரை வடக்கு,
மீசாலை. (48561)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 10 — 1938



மறைவு: 10 — 07 — 1997

### திருமதி இராமச்சந்திரன் கண்மணி

அந்தியேட்டிக் கிரியைகள்:- 24–07–1997
சபிண்டீகரக் கிரியைகள்:- 25–07–1997

தாயாகி யுடனின்று உள்ளமீர்த்துத்
தனித்துவமாம் அன்புடனே எம்மைப்பேணி
வாயார அமுதமெனப் படையல்தந்த
வசந்தத்தின் திருவுருவே! கண்கள் மூடி
நாவான பதினாறு நாளும் கண்டோம்
தாளாத துயர்நிறைந்து தவிக்கின்றோமே!

பிள்ளைகள், மருமக்கள்,
சகோதர சகோதரிகள்,
மைத்துன மைத்துனிகள்,
பேரர், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

320/2, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (48497)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பண்டா - செல்வா ஒப்பந்தம்

ஜூலை, ஒகஸ்ட் மாதங்கள் இலங்கையில் வன்செயல்கள், இரத்தக்களரி, குழப்பம், நெருக்கடி மிகுந்த மாதங்களாகக் கருதப்படுவதுண்டு. அனுபவமும் அப்படியே ஆகிவிடுவதுண்டு. அதிலும் இம்மாதம் 23 முதல் 27ஆம் திகதிவரையான ஐந்து நாள்கள் தமிழர்களால் மறக்க முடியாதவை; கறுப்பு ஜூலை என்று அகில உலக மட்டத்தில் அவப்பெயர் பதித்த 1983 ஜூலையின் (23-27) தமிழர் மீதான வெறியாட்டம் இலங்கையில் தமிழர்கள் எந்தளவுக்கு அடிமை, அகதி வாழ்வுக்கு உட்பட்டுள்ளார்கள் என்பதனை 14 வருடங்களுக்கு முன்னரே வெளிப்படுத்தியது.

அதே போன்று ஜூலை 26ஆம் திகதியும் இலங்கை அரசியலில் நினைவில் நிற்கும் நாள். காரணம் — 1957 ஜூலை 26 நள்ளிரவில் அப்போதைய பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும், தமிரசுக் கட்சியின் தலைவரும் தமிழர் தந்தையுமான எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக ஒப்பந்தம் ஒன்றை அன்று நள்ளிரவு செய்துகொண்டனர்;

சிங்களத் தீவிரவாத அரசியல்வாதிகளின்எதிர்ப்பினால் அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட போதிலும் தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு ஓர் அடிப்படையாக அப்போது அது அமைந்த தென்பதனைமறந்துவிடலாகாது.

தமிழர்களுக்கு நாம் கொடுத்திருக்கக் கூடியதிலும் பார்க்க பண்டா அதிகமாகக் கொடுத்துவிட்டார் என்று சமசமாஜக்கட்சிப் பிரமுகரும் பின்னர் சிறிமாவோ அரசில் அரசமைப்பு அமைச்சராகப்பதவி வகித்தவருமான கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா கூறுமளவுக்கு அதில் கனதி இருந்தது.

பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்படாமல், நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தால், இப்போதைய உள்நாட்டுப் போர் வெடித்து நாடு இந்தளவுக்கு அழிந்திருக்கமாட்டது; மக்கள் அழிந்திருக்க மாட்டார்கள்; இத்தனை அவலங்களையும் அவஸ்தைகளையும் அனுபவித்திருக்கமாட்டார்கள் இதனைப் பலரும் இப்போது — நாற்பது வருடங்களின் பின்னர் — உணர்கிறார்கள்.

எனினும் —

பண்டா — செல்வா ஒப்பந்தம், வடக்கு - கிழக்கு தமிழர்களின் மரபு வழித் தாயகம் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டதை, அங்கீகரித்ததை சிங்களத் தீவிரவாத அரசியல் பிரிவினர் கண்டு கொள்ள மறுக்கிறார்கள்.

அதனால் வடக்கு-கிழக்கு பிரிக்கப்படாதிருப்பதனை ஏற்க மறுக்கிறார்கள். அரசும் இந்த முக்கிய அம்சத்தில் ஒளித்துப் பிடித்து விளையாட முனைகிறது. வடக்கு - கிழக்கு பிரிக்கப்படமாட்டாது என்று கூறுவதற்குத் துணிவில்லை.

எனவே இது விடயத்தில் கவனமாகவும், எச்சரிக்கையாகவும், ஒற்றுமையாகவும் செயற்பட வேண்டிய அத்தியாவசிய, பெரும் பொறுப்பு தமிழர் தரப்புக்கு உண்டு. இதில் கட்சிலாபம், சுயசௌகரியம் என்பன குறுக்கே நிற்கலாகாது.

# அதிகாரப் பரவலாக்கல் யோசனை அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்

## மக்கள் ஆணை பெறப்படும்

கொழும்பு, ஜூலை 25

எதிர்வரும் மாதங்களில் திடீர் பொதுத் தேர்தல் ஒன்று நடக்கும் பட்சத்தில், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அதிகாரப்பரவலாக்கல் யோசனையை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கும் என அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற ஐ. தே. க. ஆதரவு வழங்காது விட்டால் திடீர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தப் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு முன்வரலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

அப்படித் தேர்தல் நடக்கும் பட்சத்தில் அதிகாரப் பரவலாக்கல் யோசனையைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்து மக்களின் ஆணையைப் பெற முயற்சி எடுக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-21-3)

## கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் சஞ்சிகை வெளியீடு, பிரியாவிடை

யாழ்ப்பாணம், ஜூலை 25

தட்டெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டு விழாவும், 1996 — 97 ஆம் ஆண்டு கூட்டுறவுப்பயிற்சி தராதர உயர்தர பிரிவை முடித்துக்கொண்டவர்களுக்கான பிரியாவிடை வைபவமும், கடந்த 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றன.

மாணவர் மன்றத்தலைவி செல்வி செ. செல்வவதனம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ. கனகசபாபதி, செயலாளர் செ. சிவசுப்பிரமணியம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி), கு. செ. சண்முகநாதன், கூட்டுறவு உதவி ஆணையாளர் (பனம் பொருள்), ச. பரநிருபசிங்கம், கூட்டுறவு உதவி ஆணையாளர், (எண்பார்வை) திருமதி கோ. திருநாவுக்கரசு, கல்லூரி அதிபர் சண்முகசுந்தரம் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்துகொண்டனர்.

கல்லூரி மாணவர்களிடையே தட்டெழுத்துச் சஞ்சிகைப் பிரதியை கூ. அ. உ. ஆணையாளர் கு. செ. சண்முகநாதன் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை யாழ். மா. கூ. சபைத் தலைவர் கனகசபாபதி பெற்றுக் கொண்டார்.

தட்டெழுத்துச் சஞ்சிகைப் பிரதிகள் யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்களம், யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி, வடக்குக் கிழக்கு திருகோணமலை மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரி ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டன. (இ-15)

## மேலும் பலர் குருநகர் வந்தனர்

குருநகர் ஜூலை 25

வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக செவ்வாய்க்கிழமையும் புதன்கிழமையும் 309 குடும்பங்களைச் சேர்ந்த 833 பேர் குருநகர் இறங்குதுறை வந்து சேர்ந்தனர்.

செவ்வாய்க் கிழமை 280 குடும்பங்களைச் சேர்ந்த 752 பேரும், புதன்கிழமை 29 குடும்பங்களைச் சேர்ந்த 81 பேரும் இதில் அடங்குவர் (இ-51)

## தேசிய அ. அட்டைகள் வந்து சேர்ந்தன

நவாலி, ஜூலை 25

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களின் ஒரு தொகுதி அடையாள அட்டைகள் யாழ். ஆட்பதிவுத்திணைக்களத்துக்கு நேற்று வந்து சேர்ந்தன.

இவற்றில் பாடசாலை மாணவர்களின் அடையாள அட்டைகளே அதிகமாக உள்ளன. (இ-100)

## தாய்ப்பாலூட்டல் வாரம்

நவாலி, ஜூலை 25

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாவது வாரம் உலக தாய்ப்பாலூட்டல் வாரமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள வைத்திய நிலையங்களிலும் வெளிக்களத்திலும் பாடசாலைகளிலும் பாலூட்டலை விளக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளை மேற்கொள்ளுமாறு சகல நிறுவனத் தலைவர்களுக்கும், சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் யாழ். சுகாதார சேவைகள் பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சு. தா. சிவபாதம் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (இ-100)

## வலி. மேற்குப் பிரதேசத்தில் ஊரடங்கு வேளையில் திருட்டு

வட்டுக்கோட்டை, ஜூலை 25

இரவு நேர ஊரடங்கு வேளையில் வீடுகளுக்குள் புகுந்து வீட்டின் சமையல் பாத்திரங்கள் முதல் மாடுகள் வரை திருடிச் செல்லும் நடவடிக்கைகள் வலி மேற்கு, பிரதேசத்தில் அடிக்கடி இடம் பெறுகின்றன.

வட்டுக் கோட்டை பகுதிகளில் பல வீடுகளில் சமையல் பாத்திரங்கள் உடுபுடவைகள் போன்ற பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன அதேபோல் சுழிபுரம், மூளாய், பண்ணாகப் பகுதிகளில் பெறுமதிமிக்க பல மாடுகள் இரவோடு இரவாக திருடப்பட்டிருக்கின்றன.

பண்ணாகப் பகுதியில் திருடிச் செல்லப்பட்ட மாடுகள் மாட்டுச் சொந்தக்காரர்களால் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

கடந்த 16 ஆம் திகதி இரவு வட்டுக்கோட்டை இராணுவ முகாமுக்கு சுமார் 200 யார் தொலைவில் உள்ள ஒருவருடைய வீட்டில் மாடுகளைத் திருடுவதற்காக ஒரு கோஷ்டி முற்பட்ட போது வீட்டுச்சொந்தக்காரர் நிலா வெளிச்சத்தில் ஆள்களை அடையாளம் கண்டு விரட்டி ஒருவரை பிடித்து விட்டார்.

பிடிபட்டவரிடம் இருந்த தேசிய அடையாள அட்டையின் பிரகாரம் இவர் மண்டைதீவுப் பகுதியை சேர்ந்தவர் எனவும் —

இவருடன் மேலும் மூவர் திருட்டுக்கு வந்ததாகவும் தெரிய வந்தது.

மேற்படி நபர் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலீஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (இ-12)

## மாஹோவில் வந்த யூரியா உரம் காங்கேசனிலேயே இறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 'மாஹோ' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள 'யூரியா' உரம் காங்கேசன் துறையில் இறக்கப்பட்டு அங்கு களஞ்சியப்படுத்தப்படவிருக்கிறது.

தற்சமயம் பருத்தித்துறைப் பகுதியில் பொருள்கள் இறக்கி முடித்தபின் 'மாஹோ' கப்பல் காங்கேசன்துறை சென்று கப்பலில் இருக்கும் உரத்தை இறக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கமநல சேவை திணைக்களத்தின் சிபாரிசின் பேரில் இந்த உரம் காங்கேசன்துறை களஞ்சியத்தில் இருந்துலொறி மூலம் எடுத்து வரப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மஹ்ரூப்பின் இடத்துக்கு முஸ்லிம் ஒருவரை நியமிக்குக

### ஐ. தே. கவிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 25

படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப்பின் இடத்துக்கு முஸ்லிம் ஒருவரை நியமிக்குமாறு திருகோணமலை முஸ்லிம் மக்கள் ஐ. தே. கவின் தலைமைப் பீடத்தை வற்புறுத்தியுள்ளனர்.

முஸ்லிம் ஒருவருக்கு இந்த இடம் வழங்கவேண்டுமானால் திருகோணமலை ஐ.தே.க. பட்டியலில் அடுத்ததாக உள்ள மூன்று சிங்களவர்களும் ஒப்புதல் அளித்து வழிவிட்டுக் கொடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கோரிக்கை குறித்து ஐ. தே. க. தலைமைப்பீடம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

## கொள்ளைகளில் ஈடுபட்டதாக 2 சப் இன்ஸ்பெக்டர்கள் ஆயுதங்களுடன் கைது

கொழும்பு, ஜூலை 25

பிரபல வங்கிக் கொள்ளைகள் மற்றும் நகைக் கடைக் கொள்ளைகள் உட்பட சுமார் 200 கொள்ளைகளில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் ரிசேர்வ் பொலீஸ் சேவையைச் சேர்ந்த இரு சப் இன்ஸ்பெக்டர்கள் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பிலிருந்து சென்ற விசேஷ பொலீஸ் குழுவினரே இவர்களை கடந்த புதன் அதிகாலை கண்டியில் வைத்துக் கைது செய்தனர்.

இந்த இரு சப் இன்ஸ்பெக்டர்களால் கொள்ளையடிக்கப்பட்டவை எனக் கூறப்படும் சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் மற்றும் பொருள்களையும் இதுவரை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பில் கைது செய்யப்பட்ட எட்டு பிரபல கொள்ளைக்காரர்கள் மீதான விசாரணையின்போதே இந்த இரு சப் இன்ஸ்பெக்டர்கள் குறித்த தகவல்கள் வெளியானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-12)

## கோட்டேயில் ஜனாதிபதி வாசஸ்தலம்: ஜனாதிபதி நாடு திரும்பிய பின்பே இறுதி முடிவு எடுக்கப்படும்

கோட்டே ஜெயவர்த்தன புரவில் உள்ள நாடாளுமன்றத் தொகுதிக் கட்டத்துக்கு அருகே ஜனாதிபதிக்கான உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தை அமைப்பது தொடர்பான இறுதி முடிவு ஜனாதிபதி நாடு திரும்பிய பின்பே எடுக்கப்படும்.

இவ்வாறு தபால் தொலைத் தொடர்புகள் வெகுஜனத் தொடர்பு அமைச்சர் மங்கள சமர வீர தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்காக நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கேள்விகளுக்கு பதிலளித்த அவர் கோட்டையில் நிர்மாணிக்கப்படுவது ஜனாதிபதிக்கான உத்தியோக பூர்வ வாசஸ் தலமே அன்றி ஜனாதிபதி மாளிகை அல்ல என்று குறிப்பிட்டார்.

பத்திரிகைகளில் இந்த விவகாரம் குறித்து பல்வேறு கருத்துக்களும் விமர்சனங்களும் வெளியிடப்பட்டிருப்பதால் ஜனாதிபதி நாடு திரும்பியபின் இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

## நாளை

ஆடி 10

சனிக்கிழமை

திதி: ஸப்தமி

மாலை 5.59 வரை.

நட்சத்திரம்: ரேவதி

நண்பகல் 12.04 வரை.

சுபநேரம்: 3.02-4.32

ராகுகாலம்: 09.02-10.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## விலை ஏற்றம்

யாழ் குடா நாட்டில்சவர்க்காரத்துக்கு திடீர் விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளது 10 ரூபா வரை விற்கப்பட்டு வந்த சன்லைட் தற்போது 13 ரூபா 14 ரூபா என விற்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல் காணாமற்போனது குறித்து ஒன்றுக்கொன்று முரணான தகவல்

கொழும்பு, ஜூலை 25

ஷெல்களுடன் இலங்கை நோக்கி வந்த கப்பல் ஒன்று கடலில் காணாமற்போய் விட்டதாக வெளிவந்த செய்திகள் குறித்து ஒன்றுக்கு ஒன்று முரணான தகவல்கள் வெளியாகி உள்ளன.

காணாமற் போனதாகக் கூறப்படும் கப்பலுக்கும் இலங்கை அரசுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

ஆனால் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் இதனை மறுக்கிறார். அந்தக் கப்பலில் இலங்கைக்கு ஆயுதங்கள் வந்தது உண்மை என்கிறார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க மறுப்புத் தெரிவித்திருந்தார்.

''இலங்கை இராணுவத்துக்கோ, கடற்படைக்கோ அல்லது விமானப்படைக்கோ எந்தவொரு கப்பலிலும் ஆயுதங்கள் வரவில்லை. பத்திரிகைகளில் இது பற்றிய செய்திகள் வந்துள்ள போதிலும் அவற்றில் எதுவித உண்மையுமில்லை.''

இப்படி சரத் முனசிங்க நேற்று செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் தெரிவித்தார்.

இது குறித்து சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு தெரிவித்ததாவது:

'' கப்பல் காணாமற் போனது குறித்த செய்தி தவறானது என இராணுவப் பேச்சாளர் கூறவில்லை இந்த சம்பவம் இந்து மகா சமுத்திரத்தில் இடம் பெற்றுள்ளது.

இலங்கையை அண்டிய கடற்பரப்பில் இச்சம்பவம் நிகழவில்லை.

கப்பல் வரும் வரை பாதுகாப்புத்துறையினர் எதிர்பார்த்து இருந்தார்கள் என்பதையும் —

ஆயுதங்களையும் ஏற்றிய கப்பலின் வரவை எதிர்பார்த்து உஷார் நிலையில் இருக்குமாறு கடற்படை முகாம்களுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன என்பதையும் — எவரும் அறிவர்.

மேலும் ஆயுதமேற்றிய கப்பல் இன்னும் வந்தடையாதது குறித்து பாதுகாப்புத் துறையினரிடையே ஒரு வித குழப்பம் நிலவுகிறது.

கப்பல் காணாமற் போனது தொடர்பாக பல நாடுகளின் உதவியை அரசு கோரியிருப்பதையும் பலரும் அறிவர்.

ஆயுதக் கப்பல் தொடர்பான தகவல்களை எனக்கு யார் வழங்கினார்கள் என்பதை அறிவதில் படையினர் ஆர்வம் கொண்டுள்ளனர்.

'' எயர்போட் பொலீஸ் '' என்ற பெயரில் எனது வீட்டுக்குச் சமீபமாகவுள்ள பகுதிகளில் புலனாய்வுத்துறையினர் நடமாடுகிறார்கள் என அறிகிறேன். எனது வீட்டுக்கு இராணுவத்தைச் சேர்ந்த எவராவது வருகிறார்களா என்பதை அவர்கள் அவதானிப்பதாகக் கருதுகிறேன்.

எனக்குத் தகவலை வழங்குகிறார் என அரசாங்கம் கருதும் நபரைக் கைதுசெய்து அவருக்கு தண்டனை வழங்கவே இம்முயற்சி மேற்கொள்ளப்படுவதாக என கு மிகவும் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக சுமார் 2 அல்லது 3 வாரங்களுக்குள் யுத்தம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளில் இடம்பெற்ற ஊழல்களை அம்பலப்படுத்தியிருந்தேன் அவை பற்றி ஜனாதிபதியும் அறிந்திருந்தார்.

என்னைக் கண்காணிப்பது தொடர்பாக தேசியப் புலனாய்வுப் பணியகத்திடம் தாம் விசாரித்ததாகவும் ஆனால் அவர்கள் என்னைக் கண்காணிக்கவில்லை எனத் தெரிவித்தனர் எனவும் அமைச்சர் மங்கள முனசிங்கா தெரிவித்தார்.

இந்த முயற்சிகளைப் பயன்தரு முயற்சிகளாகக் கருத முடியாது. எனது அயலவர்களை அச்சுறுத்துவதன் மூலம் எனக்கு அச்சத்தை உருவாக்கலாம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள் என நினைக்கிறேன்.

ஏதாவது வாகனம் எமது வீட்டருகில் வந்து நிறுத்தப்படும்போது அதன் இலக்கத்தை எழுதுகிறார்கள் இப்படி ரோக மகிழ்ச்சியற்ற சம்பவங்கள் இடம் பெறுகின்றன இவ்வாறான நடவடிக்கைகளை அரசின் உயர்மட்டத்திலுள்ளவர்கள் அறிந்திருக்காமல் இருக்கக்கூடும்.

இவ்வாறு இக்பால் அத்தாஸ் தெரிவித்தார். (இ-10)

---

## வடக்குக்கான...

(முதலாம் பக்கத் தொடர்)

யவற்றின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் பங்குபற்றினர்.

வடக்குக்கான சரக்கு கப்பல்களுக்கு எமது அமைப்பு வழித்துணை வழங்காது என்று அங்கு முடிவாகியது.

இதற்கு மாற்று ஏற்பாடாக இலங்கை கடற்கரையில் இருந்து 40 மைல்களுக்கு அப்பால் சரக்குக்கப்பல் பயணம் செய்வது என்று அங்கு முடிவாகியது.

எதிர்காலத்தில் தேவை ஏற்படும் பட்சத்தில் கப்பல்களுக்கு வழித்துணை வழங்குவதுபற்றி ஆராயப்படும்.

பயணிகள் கப்பலுக்கு வழித்துணை வழங்கும்படி எம்மிடம் கோரப்படவில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார்.

வட கொரிய சரக்குக் கப்பலான ''மொராங் பொங்'' புலிகளினால் கடத்தப்பட்டதை அடுத்து வடக்குக்கான சரக்குக் கப்பல் சேவைகள் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

தற்சமயம் வடக்கே ஒரு சில சரக்குக் கப்பல்கள் வந்த போதிலும் கடற்படையினரின் பாதுகாப்புடனேயே அவை வந்துள்ளன. (இ-3)

## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்)

வெள்ளைத் துணியினால் கட்டப்பட்டிருந்தன.

இனந்தெரியாத இச்சடலம் இனம் காணும் பொருட்டும் மரணவிசாரணை பிரேதபரிசோதனையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டது.

(இ-15)

## ஓஷன்...

(முதலாம் பக்கத் தொடர்)

துறையில் ''மாஹோ'' ''வாதுவ'' கப்பல்களிலிருந்து பொருள் இறக்கும் பணி நடைபெறுகிறது.

(இ-3)

## ஐ.நா. தூதரகம்...

(முதலாம் பக்கத் தொடர்)

தூதரகத்திடம் கோரப்பட்டதாகவும் —

அதற்கு அந்த அமைப்பு இணக்கம் தெரிவித்ததாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்தே இக்கப்பல் சேவையை நடத்துவதற்கான இணக்கப்பாட்டை விடுதலைப் புலிகளிடம் பெறுவதற்காக அந்த அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.''

அதேசமயம் திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல்சேவை எந்த நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாம் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இச்சேவையில் ஈடுபட கொழும்பில் உள்ள தனியார் கப்பல் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளதாகவும் —

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கான கப்பல் சேவையை இலங்கை கரையில் இருந்து 40 மைல்களுக்கு அப்பால் நடுக்கடல் ஊடாக நடத்த கொழும்பில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புதிய ஏற்பாட்டின் பிரகாரம் கப்பல் சேவையை நடத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் —

எந்தநேரத்திலும் இச்சேவை ஆரம்பிக்கப்படலாம் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

---

# மரண அறிவித்தல்

## திருமதி உமா சிவஞானம்

யாழ்ப்பாணம் கச்சேரியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட உமா சிவஞானம் 15-07-97 அன்று புதுக்குடியிருப்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற துரைராஜா — புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், சிவஞானத்தின் அன்பு மனைவியும், கீர்த்திகா, மதனரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இரகுநாதன் (டென்மார்க்), உஷா, இராமநாதன் (உதயன் பணிமனை). இரங்கநாதன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி பரமேஸ்வரியின் அன்பு மருமகளும், திருமதி சசிரேகா இராமநாதன் அவர்களின் அன்பு மைத்துனியும், பிரியங்காவின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-07-97 அன்று புதுக்குடியிருப்பில் நடைபெற்றன. இவ்வறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
து.இராமநாதன்
(சகோதரன்)

58, பாரதி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1194)

மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்

---

## சைக்கிள் திருடன்

தென்மராட்சி, ஜூலை 25

வீட்டின் முன்னால் விடப்பட்டிருந்த சைக்கிளை ஒருவர் திருடிக் கொண்டு சென்றதைக் கண்ட வீட்டுக்காரர் மற்றொரு சைக்கிளில் துரத்திச் சைக்கிளைப் பறித்துக் கொண்டு வந்தாராம்.

ஆத்திரமடைந்த திருடன் வீட்டுக்காரரின் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான வைக்கோல் கும்பலை தீயிட்டுக் கொளுத்திய சம்பவம் நேற்று முன்தினம் சரசாலை கத்தானை தட்டா தெருவில் இடம் பெற்றது. (இ-117)

## கல்விச் சீர்திருத்தங்களுக்கு எதிராக மாணவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 25

அரசாங்கம் முன்வைத்துள்ள கல்விச் சீர்திருத்தங்களை ஆட்சேபித்து கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று தும்முல்லை சந்தியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

கல்வி மறுசீரமைப்பு ஆணைக்குழு அறிக்கையின் படி மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது எனவும்—

கிராமப்புற மக்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுவது இதன் மூலம் குறைக்கப்படுகின்றது எனவும் — கொழும்பு பல்கலைக் கழக மாணவர் பேரவைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

### தங்க பிஸ்கட் சடத்தல் முயற்சி

## சிங்கள நடிகர் உட்பட நால்வருக்கு அபராதம்!

சிங்கப்பூரிலிருந்து 7 கிலோ நிறையுள்ள 48 லட்சத்து 97 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கபிஸ்கட்டுகளைக் கடத்தி வந்ததாக கூறப்படும் பிரபல சிங்களத் திரைப்பட நடிகர் ரெக்ஸ் கொடிப்பிலி உட்பட நால்வருக்கு 99 லட்சத்து 94 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சிங்கள நடிகர், பிரபல வர்த்தகர் ஒருவர், திரைப்படத் தயாரிப்பாளர், அவரது மனைவி ஆகியோர் சிங்கப்பூரில் இருந்து திரும்பிய சமயமே கட்டுநாயக்காவில் சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் சிக்கினர்.

இதையடுத்து அவர்களது தங்கம் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அபராதமும் விதிக்கப்பட்டது. (இ-3-10)

### வாசுதேவா தலைமையில்

## அரசுக்கு அழுத்தம் கொடுக்க எம். பிக்கள் குழு ஒன்று முயற்சி

கொழும்பு, ஜூலை 25

கடந்த பொதுத்தேர்தலின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலுள்ள ஒரு குழுவினர் முயற்சி எடுத்து வருவதாகத் தெரிய வருகிறது.

இந்தக் குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவநாணயக்காரா செயற்பட்டுவருகிறார்.

இதற்கு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்துள்ளபோதிலும் அவர்கள் செயலில் இறங்குவார்களா என்பது சந்தேகமே என வாசுதேவ நாணயக்காரா தெரிவித்தார்.

ஐ. தே. கட்சி அறிமுகப்படுத்திய பொருளாதாரக் கொள்கையை பொ. ஐ. முன்னணி அரசும் அச்சொட்டாகப் பின்பற்றி வருவதை எதிர்த்து நாளை 26 ஆம் திகதி சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் கலந்துரையாடல் ஒன்று நடத்தப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## ஆளும்கட்சி பின்வரிசை எம்.பிக்கள் வெளிநடப்பு

கொழும்பு, ஜூலை 25

இரத்தினபுரி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவெல கொலை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சுஸந்த புஞ்சிநிலமேக்கு 3 மாத விடுமுறை வழங்கும் பிரேரணைக்கு எதிராக குரல் எழுப்பிய ஆளும் கட்சி பின்வரிசை உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினர்.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோது இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

ஆளும் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களில் ஒருவரான நீலான் பெரேரா பிரேரணையை எதிர்த்து குரல் எழுப்பினார்.

''இந்தப் பிரேரணைக்கு எதிராகச் செயல்பட ஆளும் கட்சி பின்வரிசை உறுப்பினர்கள் தயாராக இருப்பினும், நாடாளுமன்ற சம்பிரதாயங்களைப் பேணவேண்டியிருப்பதால் அவ்வாறு செயற்படப் போவதில்லை'' என்று அவர் கூறியதும் ஆளும் கட்சி பின்வரிசை உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினர்.

இதையடுத்து புஞ்சிநிலமேக்கு மேலும் 3 மாதத்துக்கு நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பங்குபற்றுவதில் இருந்து விலக்களிப்பது என நாடாளுமன்றம் முடிவு செய்தது.

(இ-4-3)

## காங்கேசனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த பொருள்களை மற்றும் ஒரு கப்பலில் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு எடுத்து வர ஏற்பாடாகியுள்ளது.

அதே நேரம் — எஞ்சிய பொருள்களை கொழும்பில் இருந்து தமிழகத்துக்குச் செல்லும் இலங்கைக் கப்பல்கள் எடுத்து நேரடியாக காங்கேசன் துறைக்கு கொண்டுவர ஏற்பாடாகியுள்ளது. (இ-3)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org